//மின்னஞ்சல் மூலமாக//

தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள்,

சென்னை–6

முன்னிலை; முனைவர்.பூ.ஆ.நரேஷ்

ந.க.எண்.8095/வி1/இ2/2019, நாள். 18.11.2020

******

பொருள் : பள்ளிக்கல்வி –தொழிற்கல்வி – அரசு/நகராட்சி மேல்நிலைப் பள்ளிகளில் கணினி பயிற்றுநர் நிலை 1 – பணியிடங்கள் தோற்றுவித்தது – அரசு/நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் கணினி பயிற்றுநர் நிலை–2 ஆக பணிபுரிபவர்களுக்கு கணினி பயிற்றுநர் நிலை –1 ஆக தரம் உயர்த்துதல் – ஆணை வழங்குதல் – குறித்து.

பார்வை :

1. அரசாணை (நிலை) எண்.26, பள்ளிக்கல்வி (ப.க.7(1))த்துறை நாள் 12.02.2019
2. அரசுக் கடிதம் எண்.735/ப.க.7(1)/2020–1, நாள் 20.01.2020.
3. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு W.P.NO.6220& 7835/2019 மற்றும் WMP எண். 7070, 7071 & 8472/2019 ன்மீது தீர்ப்பு நாள் 18.02.2020
4. அரசாணை (நிலை)எண்.103 பள்ளிக்கல்வி (ப.க.7(1))த்துறை, நாள் 05.11.2020 மற்றும் அரசாணை(நிலை) எண்.107 , பள்ளிக்கல்வித் (பக7(1)துறை, நாள்.17.11.2020.
5. தமிழ்நாடு பள்ளிக்கல்வி இணை இயக்குநரின் (தொழிற்கல்வி) செயல்முறைகள் ந..க.எண்.8095/ வி1/ இ2/ 2019, நாள் 27.06.2019, 21.01.202 மற்றும் 16.03.2020.
6. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு W.P.NO.19316, 22180&20566/2019 மற்றும் WMP எண். 18786, 18789, 18795, 18799, 24041, 21452, 21455, 19804, 19800, 19801 & 19805/2019 ன்மீது தீர்ப்பு நாள் 24.01.2020.
7. முதன்மைக் கல்வி அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள்.

******

பார்வை 1–ல் கண்டுள்ள அரசாணை மூலம் ஏற்கனவே அரசு/நகராட்சி மேல்நிலைப்பள்ளிகளில் அனுமதிக்கப்பட்ட கணினி பயிற்றுநர் பணியிடங்கள் கணினி பயிற்றுநர் நிலை –2 ஆக மறு பெயரிட்டு, அவற்றில் பணிபுரிந்து வரும் கணினி பயிற்றுநர்கள் நிலை –2 பணியாளர்களை, NCTE கல்வி தகுதிகளின்படியும் பார்வை 1 முதல் 4 முடிய குறித்துள்ள ஆணைகளின்படி (குறைந்தபட்சம் 8 ஆண்டுகள் பணிமுடித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையின்றி) தகுதிவாய்ந்தோர் விவரங்கள் பார்வை 8–ல் குறித்துள்ள விவரப்படி முதன்மைக்கல்வி அலுவலர்களால் அனுப்பப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், கீழ்க்காணும் நிபந்தனைகளுக்கு உட்பட்டு இத்துடன் இணைக்கப்பட்டுள்ள இணைப்பில் கண்டவாறு பணியாற்றி வரும் தகுதிவாய்ந்த கணினி பயிற்றுநர் நிலை –2 பணியிடங்களை, பார்வை 1 மற்றும் 4 –ல் குறிப்பிடப்பட்டுள்ள அரசாணையின் அடிப்படையில் கணினி பயிற்றுநர்கள் நிலை –1 பணியிடமாக (ரூபாய் 36,900– 1,16,600 என்ற ஊதியம் ஏற்ற முறையில் –(Level –18)) தரம் உயர்த்தி ஆணையிடப்படுகிறது.

மேற்படி பணியிடங்களில் கணினி பயிற்றுநர் நிலை 2ஆக பணிபுரிந்து வரும் இணைப்பில் கண்ட தகுதிவாய்ந்த நபர்களை, அவர்கள் பணிபுரிந்து வரும் அதே பள்ளியில் கணினி பயிற்றுநர்கள் நிலை 1–ஆக அரசு ஆணை(நிலை) எண். 26 பள்ளிக் கல்வி (ப.க.7(1)த் துறை, வெளியிடப்பட்ட நாளான 12.02.2019 முதல் தரம் உயர்த்தி இதன் மூலம் ஆணையிடப்படுகிறது.

தரம் உயர்த்தப்பட்டுள்ள இணைப்பில் கண்ட ஆசிரியர்கள், அப்பணியிடத்தில் பணியேற்க செய்வதற்கு முன் கீழ்க்காணும் நிபந்தனைகளை நிறைவு செய்யும் விவரங்களை அதாவது தரம் உயர்த்தப்பட்ட பணியிடத்தில் பணிபுரிய தகுதிவாய்ந்தவர்களா என்பதை தலைமையாசிரியர் உறுதிபடுத்திக் கொள்ள வேண்டும்.

<u>நிபந்தனைகள்</u>

1. பட்டியலில் இடம்பெற்றுள்ள கணினி பயிற்றுநர்கள் (நிலை–2) தகுதிகாண் பருவம் மற்றும் பணிவரன்முறை முறையே முடிக்கப்பட்டுள்ளார்களா தலைமையாசிரியர்கள் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
2. பட்டியலில் இடம்பெற்றுள்ள கணினி பயிற்றுநர்கள் (நிலை–2) ஆக பணிபுரிபவர்கள் அரசாணை நிலை எண். 26 பள்ளிக்கல்வித்(பக7(1))துறை, நாள் 12.02.2019ல் பத்தி 1–ல் குறிப்பிடப்பட்டுள்ள NCTE விதிகளின்படி குறைந்தபட்ச கல்வி மதிப்பெண்கள் பெற்றள்ளார்களா என்பதை தலைமையாசிரியர் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.
3. பட்டியலில் இடம்பெற்றுள்ள கணினி பயிற்றுநர்கள் (நிலை–2) வெளிமாநில சான்று பெற்றிருப்பவர்கள் எனில் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதா என்பதை தலைமையாசிரியர் உறுதிசெய்து கொள்ள வேண்டும்.
4. பட்டியலில் இடம்பெற்றுள்ள கணினி பயிற்றுநர்கள் (நிலை–2) ஒரே ஆண்டில் இருவேறு பட்டங்கள் (Simultaneous Degree / Double Degree) பட்டப்படிப்பில் இரட்டைப்படிப்பு படித்தவர்களாக இருப்பின் அவர்களை நிலை1–ஆக பணியேற்க அனுமதிக்க கூடாது.
5. பட்டியலில் இடம்பெற்றுள்ள கணினி பயிற்றுநர்கள் (நிலை–2) 10+2+3 மற்றும் முதுகலை பட்டப்படிப்பு மற்றும் பி.எட்., கல்வித்தகுதிகள் முறைப்படி பெற்றவர்களாக என்பதை உறுதி செய்துக் கொள்ள வேண்டும். **பணியில் சேர்ந்த பின் பெற்ற உயர்கல்வி தகுதிக்கு முறைப்படி துறையின் அனுமதி பெறப்பட்டுள்ளதா என்பதை உறுதி செய்து கொள்ள வேண்டும்.**
6. பட்டியலில் இடம்பெற்றுள்ள கணினி பயிற்றுநர்கள் (நிலை–2) மீது ஒழுங்கு நடவடிக்கை நிலுவையில் இருப்பின் அவர்களை நிலை1–ஆக பணியேற்க அனுமதிக்க கூடாது. உடனடியாக சார்ந்த முதன்மைக்கல்வி அலுவலர் மூலம் இவ்வியக்ககத்திற்கு தெரிவிக்க வேண்டும்.
7. பட்டியலில் இடம் பெற்றுள்ள கணினி பயிற்றுநர்கள் நிலை –2 மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு தண்டனை பெற்று தண்டனைக்காலம் முடிவடையாத நிலையில் உள்ளவர்களை நிலை1–ஆக பணியேற்க அனுமதிக்க கூடாது.
8. பட்டியலில் இடம் பெற்றுள்ள கணினி பயிற்றுநர்கள் நிலை 2ல் தலைமையாரிசியர் / முதன்மைக்கல்வி அலுவலரின் தவறான பரிந்துரையின் அடிப்படையில் தொழிற்கல்வி ஆசிரியர் (கணினி அறிவியல்) பெயர்கள் இடம் பெற்று இருந்தால் அவர்களை கணினி பயிற்றுநர் நிலை 1 ஆக பணியில் சேர அனுமதிக்கக் கூடாது.
9. பட்டியலில் இடம்பெற்றுள்ள கணினி பயிற்றுநர்கள் (நிலை–2) ஆகப் பணிபுரிபவர்களில் பட்டப்படிப்புகளில் இணைத்தன்மை (Equivalency) பெற்றுள்ளார்களா என்பதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

மேலே வழங்கப்பட்டுள்ள நிபந்தனைகள் அனைத்தும் பூர்த்தி செய்துள்ள விவரத்தை உறுதிப்படுத்திக் கொண்டு தரம் உயர்த்தப்பட்ட கணினி பயிற்றுநர் நிலை–1 பணியிடத்தில் பணியேற்க அனுமதிக்க வேண்டும். உரிய பணியேற்பு அறிக்கையை சம்பந்தப்பட்ட முதன்மைக்கல்வி அலுவலருக்கு உடனடியாக அனுப்பி வைக்குமாறு சார்ந்த தலைமை ஆசிரியர் அறிவுறுத்தப்படுகிறார்.

**இணைப்பு:**

1. பார்வை 4ல் குறித்துள்ள அரசாணை எண். 103 மற்றும் 107 ன் நகல்
2. கணினி பயிற்றுநர் நிலை –1 ஆக தரம் உயர்த்துபவர்கள் பட்டியல்

**இணை இயக்குநர் ( தொழிற்கல்வி)**

**பெறுநர்**

சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் (முதன்மைக்கல்வி அலுவலர்கள் மூலமாக)

**நகல்**

சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர்கள், சம்பந்தப்பட்ட மாவட்ட / சார்நிலை கருவூல அலுவலர்கள்(முதன்மைக்கல்வி அலுவலர்கள் மூலமாக)

e.v © ./09/ M 3/2020, ehŸ 18.11.2020

(e f š) j f t Y ¡ f h f Î « j ¡ f e l t o ¡ i f ¡ f h f Î « mD¥g¥gL »wJ.

K j ‹ i k ¡ f š é mY t y®,
n t ÿ ®.

bgWe®
rh®ª j gŸ ë j i y i kahÁça®f Ÿ,
xU§» i z ª j n t ÿ ® kh t £ l «.

அ8

சுருக்கம்

பள்ளிக் கல்வி – பள்ளிக் கல்வித் துறையில் கணினி பயிற்றுநர் நிலை–II ஆக பணிபுரிந்து வரும் கணினி பயிற்றுநர்களை 8 ஆண்டுகள் பணி முடிக்க வேண்டும் என்ற நிபந்தனையின்றி கணினி பயிற்றுநர் நிலை – I ஆக தரமுயர்த்துதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வி (பக7(1)) துறை

அரசாணை (நிலை) எண்.103

நாள்:05.11.2020
திருவள்ளுவர் ஆண்டு – 2051
சார்வரி வருடம், ஐப்பசி–20
படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்.26 பள்ளிக் கல்வித் துறை நாள் 12.02.2019.
2. சென்னை உயர்நீதிமன்ற வழக்கு நீதிப் பேராணை மனு எண்.6220 மற்றும் 7835/2019–ன் மீது பெறப்பட்ட தீர்ப்பாணை நாள் 18.02.2020.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந. க. எண். 8095/வி1/இ2/2019, நாள் 08.01.2020 மற்றும் 22.10.2020.

--------

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ஏற்கனவே பட்டதாரி ஆசிரியர் தரத்தில் பணிபுரிந்து வரும் கணினி பயிற்றுநர்களை கணினி பயிற்றுநர் நிலை II என பெயர் மாற்றம் (Re-designate) செய்தும், தேசிய ஆசிரியர் கல்வி குழும (NCTE) விதிமுறைகளில் தெரிவித்துள்ள குறைந்தபட்ச கல்வித் தகுதியுடன் புதியதாக கணினி பயிற்றுநர் நிலை–I பணியிடங்களை ரூ.36900 – 116600 என்ற ஊதியக்கட்டில் தோற்றுவித்தும், பள்ளிக் கல்வித் துறையில் ஏற்கனவே அரசு மேல்நிலைப் பள்ளிகளில் அனுமதிக்கப்பட்ட 2689 கணினி பயிற்றுநர் பணியிடங்களில் 814 கணினி பயிற்றுநர் நிலை I பணியிடங்களை 814 காலியாக உள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை ஒப்படைப்பதன் மூலம் தோற்றுவித்தும், புதியதாக தோற்றுவிக்கப்பட்டுள்ள 814 கணினி பயிற்றுநர் நிலை I பணியிடங்களை ஆசிரியர் தேர்வு வாரியம் மூலம் நிரப்பிக் கொள்ளவும், ஏற்கனவே கணினி பயிற்றுநர் நிலை II இல் பணிபுரிந்து வரும் ஆசிரியர்கள் 8 ஆண்டுகள் பணி அனுபவம் பெற்று, தேசிய ஆசிரியர் கல்வி குழும (NCTE) விதிமுறைகளில் தெரிவித்துள்ள குறைந்தபட்ச கல்வித் தகுதி பெற்றிருப்பின் அவர்களை கணினி பயிற்றுநர் நிலை–I ஆக தரமுயர்த்தவும் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்ட, கணினி பயிற்றுநர் நிலை–IIஇல் 8 ஆண்டுகள் பணி முடிக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு தளர்வளிக்கக் கோரி 32 நபர்கள் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நீதிப் பேராணை மனு எண்கள்.6220 (ம) 7835/2019 மற்றும் பல்வகை மனு எண்கள் 7070, 7071 மற்றும்

8472/2019–ன் மீது 18.02.2020ம் நாளன்று கீழ்க்கண்டவாறு தீர்ப்பாணை வழங்கப்பட்டுள்ளது.

"xxx this Court has absolutely no hesitation to interfere with clause 2(v) of the impugned Government Order dated 12.02.2019, which prescribes 8 years of service in the post of Computer Instructor and the same is hereby quashed. The State Government is directed to strictly comply with the other qualifications prescribed in the impugned Government Order and also the NCTE Regulations and consider the promotion of all those eligible candidates to the post of Computer Instructor Grade-I. This process shall be completed within a period of three months from the date of receipt of copy of this order.

In the result, both the Writ Petitions are allowed with the above directions. No costs. Consequently, the connected miscellaneous petitions are closed."

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதங்களில் , கணினி அறிவியல் பாடத்தில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டப்படிப்பில் ஒரே பாடத்தைப் பயின்று (Same Major) அரசாணை (நிலை) எண்.26 பள்ளிக் கல்வித் துறை, நாள்.12.02.2019–ன்படி முழுக்கல்வித்தகுதி பெற்று அரசாணை வெளியிடப்பட்ட நாளில் (12.02.2019–ல்) குறைந்தபட்சம் 8 ஆண்டுகள் பணி முடிக்காதவர்கள் சுமார் 800 ஆசிரியர்கள் உள்ளதாகவும் மேற்கண்ட ஆசிரியர்கள் தொடர்ந்து மாணவர்களுக்கு சிறப்பான தேர்ச்சி விகிதம் அளித்து வருவதை கருத்தில் கொண்டு அவர்களுக்கு கணினி பயிற்றுநர் நிலை II இல் 8 ஆண்டுகள் பணி முடிக்க வேண்டும் என்ற நிபந்தனைக்கு தளர்வளித்து ஆணை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசினைக் கோரியுள்ளார்.

4. மேற்கண்ட சூழ்நிலையில், மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நீதிப் பேராணை மனு எண்கள்.6220 (ம) 7835/2019 மற்றும் பல்வகை மனு எண்கள் 7070, 7071 மற்றும் 8472/2019–ன் மீதான 18.02.2020ம் தீர்ப்பாணையை செயல்படுத்தும் பொருட்டு, பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை அரசு கவனமுடன் ஆய்வு செய்து, 8 ஆண்டுகள் பணி முடிக்காத 800 கணினி பயிற்றுநர் நிலை IIஇல் உள்ள கணினி பயிற்றுநர்களை 8 ஆண்டுகள் பணி முடிக்க வேண்டும் என்ற நிபந்தனையின்றி கணினி பயிற்றுநர் நிலை–I ஆக தரமுயர்த்த அனுமதி வழங்கலாம் என முடிவு செய்து அவ்வாறே அரசு ஆணையிடுகிறது. மேலும் இக்கருத்துருவிற்கு ரூ.53,76,000/– கூடுதல் செலவினம் ஏற்படும்.

5. இவ்வாணை நிதித்துறையின் கோப்பு எண்.41020/கல்வி–II/2020, நாள்.05.11.2020 மற்றும் அ.சா.எண்.41158/மை.ம.ஆ.பி/2020 நாள் 05.11.2020–இல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தீரஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர்,சென்னை – 6.
தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6
மாநிலக் கணக்காயர், சென்னை – 18/35.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்

நகல்
நிதி (கல்வி–II/மை.ம.ஆ.பி)த் துறை, சென்னை–9.

மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர்,
சென்னை – 9
பள்ளிக் கல்வித் துறையின் முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை – 9
அரசு சிறப்பு வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம், சென்னை–104.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

5/11/2020

பிரிவு அலுவலர்

5/11/2020

## சுருக்கம்

பள்ளிக் கல்வி – தேசிய ஆசிரியர் கல்வி குழுமம் (NCTE) விதிகளின்படி முழுகல்வித் தகுதி பெற்று 8 ஆண்டுகள் பணி முடிக்காத 800 கணினி பயிற்றுநர் நிலை IIஇல் உள்ள கணினி பயிற்றுநர்களை 8 ஆண்டுகள் பணி முடிக்க வேண்டும் என்ற நிபந்தனையின்றி கணினி பயிற்றுநர் நிலை–Iஆக தரமுயர்த்த அனுமதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டது – அரசாணைக்கு தெளிவுரை வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பள்ளிக் கல்வித் (பக7(1)) துறை**

**அரசாணை (நிலை) எண்.107** **நாள்:17.11.2020**

**திருவள்ளுவர் ஆண்டு – 2051**
**சார்வரி வருடம், கார்த்திகை 2**
**படிக்கப்பட்டவை:**

1. அரசாணை (நிலை) எண்.26 பள்ளிக் கல்வி(பக7(1))த் துறை, நாள்.12.02.2019.
2. அரசாணை (நிலை) எண்.103 பள்ளிக் கல்வி(பக7(1))த் துறை, நாள்.05.11.2020.
3. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.8095/வி1/இ2/2019, நாள்.09.11.2020.

*****

**ஆணை:–**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் கணினி பயிற்றுநர் நிலை–Iஆக தரமுயர்த்துவதற்கு கணினி பயிற்றுநர் நிலை–IIஇல் உள்ள கணினி பயிற்றுநர்கள் தேசிய ஆசிரியர் கல்வி குழுமம் (NCTE) விதிகளின்படி முழுகல்வித் தகுதி பெற்று 8 ஆண்டுகள் பணிமுடித்திருக்க வேண்டும் என்று நிபந்தனை வழங்கி அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், அரசாணை (நிலை) எண்.26 பள்ளிக் கல்வித் துறை நாள்.12.02.2019–ன்படி கணினி பயிற்றுநர் நிலை–Iஆக தரமுயர்த்துவதற்கு கணினி பயிற்றுநர் நிலை–IIஇல் உள்ள கணினி பயிற்றுநர்கள் தேசிய ஆசிரியர் கல்வி குழுமம் (NCTE) விதிகளின்படி முழுகல்வித் தகுதி பெற்று 8 ஆண்டுகள் பணிமுடித்திருக்க வேண்டும் என்ற நிபந்தனையின்றி கணினி பயிற்றுநர் நிலை–Iஆக தரமுயர்த்த அனுமதி வழங்கி அரசால் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. திருமதி.கே.குணவதி மற்றும் 20 நபர்கள், திருமதி.E.சந்திரவதனா மற்றும் 10 நபர்களால் சென்னை உயர்நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு நீதிப்பேராணை மனு எண்கள்.6220/2019 மற்றும் 7835/2019–ன் மீது பெறப்பட்ட 13.02.2020 நாளிட்ட தீர்ப்பாணையை செயல்படுத்துவது குறித்து வழக்கு மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் விசாரணைக்கு வந்த போது, கணினி பயிற்றுநர் நிலை–Iஆக தரமுயர்த்தப்படும் கணினி பயிற்றுநர்களுக்கு அரசாணை (நிலை) எண்.26 பள்ளிக் கல்வி(பக7(1))த் துறை

நாள்.12.02.2019–ன்படி, மேற்படி அரசாணை வெளியிடப்பட்ட நாள் முதல் பணிப்பலன் மற்றும் பணப்பலன்கள் வழங்கும் வகையில் உரிய தெளிவுரை வழங்கி ஆணை வெளியிடுமாறு அறிவுறுத்தியதின் அடிப்படையில் உரிய தெளிவுரை வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசினைக் கோரியுள்ளார்.

4. மேற்கண்ட சூழ்நிலையில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்றம் அறிவுறுத்தியதன் அடிப்படையில், பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, அரசாணை (நிலை) எண்.26 பள்ளிக் கல்வித் துறை நாள்.12.02.2019–ன்படி தேசிய ஆசிரியர் கல்வி குழுமம் (NCTE) 2014 விதிமுறைகளின்படி முழுகல்வித் தகுதி பெற்று 8 ஆண்டுகள் பணிமுடிக்காத 800 கணினி பயிற்றுநர் நிலை–IIஇல் உள்ள கணினி பயிற்றுநர்கள் 8 ஆண்டுகள் பணி முடிக்க வேண்டும் என்ற நிபந்தனையின்றி கணினி பயிற்றுநர் நிலை–Iஆக தரமுயர்த்தி வெளியிடப்பட்ட அரசாணை (நிலை) எண்.103 பள்ளிக் கல்வி (பக7(1))த் துறை நாள்.05.11.2020ன்படி தரமுயர்த்தப்படும் நிலை–II கணினி பயிற்றுநர் பணியிடங்கள் அரசாணை (நிலை) எண்.26 பள்ளிக் கல்வி (பக7(1))த் துறை நாள்.12.02.2019 வெளியிடப்பட்ட நாளான 12.02.2019–ஆம் நாள் முதல் கணினி பயிற்றுநர் நிலை–Iஆக தரமுயர்த்தப்படுகிறது எனவும், அந்நாள் முதல் இவ்வாறு தரமுயர்த்தப்பட்ட கணினி பயிற்றுநர்களுக்கு பணிப்பலன் மற்றும் பணப்பலன்களை வழங்கலாம் எனவும் தெளிவுரை வழங்கி அரசு ஆணையிடுகிறது.

5. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.42585/நிதி (கல்வி–II) துறை/2020 நாள் 16.11.2020–இல் வெளியிடப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தீரஜ் குமார்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை – 6.
தலைவர், ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–6
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.
அனைத்து மாவட்டக் கருவூல அலுவலர்கள்

நகல்
நிதி (கல்வி–II/மை.ம.ஆ.பி)த் துறை, சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும்
விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்களின் நேர்முக உதவியாளர்,
சென்னை – 9
பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளரின் தனிச் செயலர், சென்னை 9
அரசு சிறப்பு வழக்கறிஞர், சென்னை உயர்நீதிமன்றம்,சென்னை–104.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

17/11/2020

பிரிவு அலுவலர்